# தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம்

## தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் தீயணைப்பாளர்கள் தேர்வு-2007

**ந.க. எண் அ1/3710/2006**

## மாதிரி விண்ணப்பப் படிவம்

*(ஆங்கிலத்தில் நிரப்புக - கணிப்பொறி உபயோகத்திற்காக)*

*தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை தீயணைப்பாளர்கள் தேர்வு 2007-க்கான விண்ணப்பம்*

**I)** இந்தியக் குடியுரிமையுடைய கீழ்க்கண்ட தகுதி பெற்ற ஆண் விண்ணப்பதாரர்களிடமிருந்து தீயணைப்பாளர்கள் பதவிக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**II)** <u>விண்ணப்பிப்போருக்கு இருக்க வேண்டிய தகுதிகள்:</u>

(அ) <u>வயது</u>

1) **01-07-2007** அன்று 18 வயது நிறைவு பெற்றவராக இருக்க வேண்டும் (30-06-1989 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ பிறந்திருக்க வேண்டும்)

2) 24 வயதிற்கு மேற்படாதவராக இருக்க வேண்டும் (01-07-1983 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ பிறந்திருக்க வேண்டும்).

3) பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்கள் **01-07-2007** அன்று 18 வயது நிறைவு பெற்றவராகவும் 26 வயதிற்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும் (அதாவது 01-07-1981 அன்றோ அதற்கு பின்னரோ பிறந்திருக்கவேண்டும்)

4) **ஆதி திராவிடர் / பழங்குடியினர் வகுப்பினைச் சார்ந்தவர்கள்:-** 01-07-2007 அன்று 18 வயது நிறைவு பெற்றவராகவும்; 29 வயதிற்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும் (அதாவது 01-07-1978 அன்றோ அதற்குப் பின்னரோ பிறந்திருக்க வேண்டும்).

5) (i) **முன்னாள் இராணுவத்தினர்:-** 01-07-2007 அன்று 45 வயதிற்கு மேற்படாதவராக இருக்க வேண்டும் (அதாவது 01-07-1962 அன்றோ அதற்குப் பின்னரோ பிறந்திருக்க வேண்டும்)

(ii) **முன்னாள் இராணுவத்தினர்:-** இராணுவப் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டு இவ்வறிவிக்கை வெளிவந்த தேதியில் மூன்றாண்டு நிறைவு செய்யாதவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.

(iii) இராணுவத்தில் வாகன ஓட்டுனர் (Driver)/ தானியங்கி கம்மியர் (Auto Mechanic) தானியங்கி மின் வினைஞர் (Auto Electrician) மற்றும் படைகலன் பழுது பார்ப்போர் (Armourers) ஆக பணிபுரிந்தோருக்கு உடல் கூறு அளத்தல், உடல் தாங்கும் திறனறித் தேர்வு (Endurance Test) மற்றும் உடல் திறன் போட்டிகள் கிடையாது. எழுத்துத் தேர்வில் தேர்ச்சிப் பெற்றவர்கள், அவர்களின் அசல் சான்றிதழ்களை, சான்றிதழ்கள் சரிபார்த்தலின் போது சரிபார்ப்பதற்காக கொண்டு வர வேண்டும்.

ஆ) <u>உடல் அளவுகள்:</u>

**1) உயரம் :** குறைந்த அளவு 168 செ. மீட்டர் இருக்க வேண்டும்
**ஆதி திராவிடர் /பழங்குடியினர்:-** உயரம் குறைந்த அளவு 165 செ. மீட்டர் இருக்க வேண்டும்,.

**2) மார்பளவு:** அனைத்து வகுப்பினருக்கும் சாதாரண நிலையில் 81 செ. மீட்டர் இருக்க வேண்டும்.
மூச்சடக்கிய மார்பு விரிவாக்கம் (Expansion) குறைந்த அளவு 5 செ. மீட்டர் இருக்க வேண்டும்.

இ) <u>கல்வித் தகுதி:</u>

(1) பழைய பாடத்திட்டத்தின்படி எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி
**அல்லது**
புதிய பாடத்திட்டத்தின்படி 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்

(2) தமிழில் பேச, படிக்க மற்றும் எழுத நிறைவான அறிவு பெற்றிருக்க வேண்டும்.

குறிப்பு:-1) பத்தாம் வகுப்பு அல்லது அதற்கு இணையான படிப்பில் தமிழை ஒரு மொழி பாடமாக படித்திருக்க வேண்டும் அல்லது தமிழ் வழியாக பாடங்களை பயின்றிருந்தாலோ அல்லது தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப் பெற்ற இரண்டாம் நிலை தமிழ் தேர்வில் தேர்ச்சி பெற்றிருந்தாலோ, தமிழில் நிறைவான அறிவு பெற்றவராக கருதப்படும்.

2) மேலும், அவ்வாறு தேர்ச்சி பெறாதவர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தமிழ் மொழித் தேர்வில், பணியில் சேர்ந்த இரண்டு வருடங்களுக்குள் தேர்ச்சி பெற வேண்டும்.

**III)** <u>பதவிகளின் மொத்த எண்ணிக்கை:</u>

| இனம் | நேரிடைத் தேர்வு | (முன்னர் நிரப்பப்படாத பின்னடைவு காலியிடங்கள்) | தற்போது நிரப்பப்பட வேண்டிய மொத்த காலியிடங்கள் |
|---|---|---|---|
| ஆண்கள் | 285 | 54 (ST) | 339 |

**IV)** <u>ஊதிய விவரம்:</u> ரு. 2750-70-3800-75-4400 மற்றும் இதர படிகள்.

**V)** <u>வகுப்புவாரி விகிதாச்சாரம்:</u> நடைமுறையில் உள்ள அரசு விதிமுறைகளின்படி வகுப்புவாரி விகிதாச்சார ஒதுக்கீடு முறை கடைப்பிடிக்கப்படும்.

**தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களின் வாரிசுகள் மற்றும் அமைச்சுப் பணியாளர்களை சார்ந்துள்ளோருக்கு சிறப்பு ஒதுக்கீடு:**
பணிபுரியும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்கள் மற்றும் ஓய்வு பெற்ற, மறைந்த மற்றும் மருத்துவரீதியாக தகுதியின்மைப் பெற்ற தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களின் வாரிசுகளுக்கு 10 சதவீதம் ஒதுக்கப்படும். மேற்படி 10 சதவீத ஒதுக்கீட்டில் 10 சதவீதம் பணியிலுள்ள அமைச்சுப் பணியாளர்களைச்

**VI)** இப்பணிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர், பின் வரும் மாதிரி விண்ணப்பப் படிவத்தில் கண்டது போல் படிவம் தயாரித்துப் பூர்த்தி செய்து அனுப்பவேண்டும்:-

| குறியீட்டு எண் |
|---|
| அலுவலக உபயோகத்திற்கு மட்டும் |

**அண்மையில் எடுக்கப்பட்ட புகைப்படம் 5 செ.மீ. X 7 செ.மீ. இங்கே ஒட்டவும்**

1. பெயர் :
(ஆங்கிலத்தில் கொட்டை எழுத்துக்களில் பள்ளிச் சான்றில் உள்ளபடி)
2. தந்தை பெயர் :
3. பிறந்த தேதி :
4. கல்வித்தகுதி :
5. நாட்டினம் (Nationality) :
6. வகுப்பு (உரிய அடைப்பில் (X) குறியீடு செய்ய வேண்டும்)
(OC) ஏனையோர் ☐ ; (BC) பிற்படுத்தப்பட்ட வகுப்பு ☐ ;
(MBC) மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு/(DNC) சீர்மரபினர் ☐ ; (SC) ஆதி திராவிடர் ☐ ; (ST) பழங்குடியினர் ☐
7. மதம் (Religion) : இந்து ☐ ; இஸ்லாமியர் ☐ ; கிருஸ்தவர் ☐ ; மற்றவர் ☐
8. (அ) நீவிர் இராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவரா? : ஆம் / இல்லை
(ஆ) ஆம் எனில் சான்று இணைக்கப்பட்டுள்ளதா? : ஆம் / இல்லை
9. (அ) இராணுவத்தில் வாகன ஓட்டுனர் தானியங்கி கம்மியர் மின் வினைஞர் படைகலன் பழுது பார்ப்போர் ஆக பணிபுரிந்திரிக்கிறீரா? : ஆம் / இல்லை
(ஆ) ஆம் எனில் சான்று இணைக்கப்பட்டுள்ளதா? : ஆம் / இல்லை
10. (அ) தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறை பணியாளர் அல்லது அமைச்சுப் பணியாளரின் வாரிசுதாரரா? : ஆம் / இல்லை
(ஆ) ஆம் எனில் சான்று இணைக்கப்பட்டுள்ளதா? : ஆம் / இல்லை
(இ) நீவிர் ஏற்கனவே ஏதேனும் அரசுப் பணியில் உள்ளீரா? : ஆம் / இல்லை
(ஈ) தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களின் வாரிசுகள் மற்றும் அமைச்சுப் பணியாளர்களை சார்ந்துள்ளோருக்கான ஒதுக்கீட்டில் ஏற்கனவே உமக்கு பணி அளிக்கப்பட்டுள்ளதா? : ஆம் / இல்லை
11. விண்ணப்பதாரர் முகவரி
அ) கதவு எண் : ஆ) தெருவின் பெயர் :
இ) கிராமம் / நகரத்தின் பெயர் : ஈ) அஞ்சல் நிலையம் :
உ) மாவட்டத்தின் பெயர் : ஊ) அஞ்சல் குறியீடு எண் :
எ) முகவரிக்குட்பட்ட காவல் நிலையத்தின் பெயர் :
12. வங்கி வரைவோலை விவரம் :
அ) வங்கியின் பெயர் : ஆ) வரைவோலை எண் :
இ) தேதி : ஈ) தொகை :
13. உம் மீது ஏதாவது குற்ற வழக்கு இருந்ததா? அல்லது இருக்கிறதா? : ஆம் / இல்லை
அதன் விவரம் (வழக்கு எண் ________, நாள் ________, சட்டப்பிரிவு ________________, காவல் நிலையத்தின் பெயர் __________ மற்றும் தற்போதைய நிலை ________________ )

### <u>உறுதிமொழி</u>

மேலே குறிப்பிட்டுள்ள விவரங்கள் யாவும் உண்மையானது எனவும், முழுமையானது எனவும், சரியானது எனவும். நான் சான்றளிக்கிறேன். மேலே குறிப்பிட்டுள்ள விவரங்கள் பொய்யானவை என்றோ, தவறானவை என்றோ, எத்தருணத்தில் தெரியவந்தாலும், நான் தகுதியற்றவன் எனத் தெரியவந்தாலும், என் மீது நடவடிக்கை எடுப்பதோடு மட்டுமல்லாமல் எனது தேர்வினை ரத்து செய்யலாம் என்று இதன் மூலம் நான் ஒப்புதல் அளிக்கிறேன். பணி நியமனத் தேர்வு குறித்த நடைமுறைகளுக்கும் தேர்வுகளின் சட்ட திட்டங்களுக்கும் நான் உட்படுகிறேன் என உறுதியளிக்கிறேன்.

இடம் :

நாள் : விண்ணப்பதாரரின் கையொப்பம்

<u>விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ளவை:</u>

1. 2. 3.
4. 5. 6.

**VII)** <u>விண்ணப்பிக்கும் முறை:</u>

1) மாதிரி விண்ணப்பப் படிவத்தினை 21 செ,மீ, x 30 செ,மீ, (foolscap) அளவில் வெள்ளைத் தாளில் தெளிவாக தட்டச்சு செய்து ஆங்கிலத்தில் பூர்த்தி செய்து நேரிலோ அல்லது தபாலிலோ **18-08-2008** அன்று மாலை 5.45 மணிக்குள், சென்னை-2, எண் 807, அண்ணாசாலையில் அமைந்துள்ள **தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமத்தில்** கிடைக்கும்படி அனுப்பவும்.
2) நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் ரு, 150/-க்கான பாரத ஸ்டேட் வங்கியிலிருந்து வாங்கப்பட்ட வரைவோலை **(Demand Draft)** ஒன்றினைக் கீழ்க்கண்ட பெயருக்கு எடுத்து அனுப்பவும்.

**<u>"The Chairman, Tamilnadu Uniformed Services Recruitment Board, Chennai-600 002"</u>**

3) வரைவோலைதனை சென்னையில் காசாக்க ஏதுவாக **State Bank of India Service Branch-8443** மீது எடுத்து அனுப்பவும்.
4) தன் முகவரியிட்ட ரு, 6/-க்கான தபால் வில்லை ஒட்டிய 25 செ.மீ. X 12 செ,மீ, அளவிற்குக் குறையாத உறைதனை இணைத்து அனுப்பவும்.
5) உறையின் மேற்பகுதியில் "**தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை தீயணைப்பாளர்கள் தேர்வு 2007**" என்று குறிப்பிடவும்.
6) விண்ணப்பப் படிவத்துடன் கீழ்க்கண்ட சான்றிதழ்களின் <u>**நகல்களை**</u> மட்டும் இணைத்து அனுப்பவும்.
   i) வயதை நிரூபிக்கக் கல்விச் சான்று.
   ii) கல்விச் சான்று.
   iii) சாதிச் சான்று(அரசாணை (நிலை) எண் 2137, ஆதி திராவிடர் / பழங்குடி நலத்துறை, நாள் 11-11-1989 ன்படி பழங்குடி வகுப்பை சார்ந்தவர்கள், வருவாய் கோட்டாட்சி அலுவலரால் வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழின் நகலை மட்டுமே சமர்பிக்க வேண்டும். 11-11-1989-க்கு முன்னர் தாசில்தார்களால் வழங்கப்பட்ட பழங்குடி வகுப்பைச் சார்ந்தவருக்கான சாதிச் சான்றிதழின் நகலை சமர்ப்பித்தாலும் செல்லுபடியாகும்.
   iv) இராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றிருப்பின் அதற்கான சான்று. (Discharge Certificate).
   v) இராணுவத்தில் வாகன ஓட்டுனர்/தானியங்கி கம்மியர்/மின்வினைஞர்/ படைகலன் பழுதுபார்ப்போர் ஆக பணிபுரிந்திருப்பின் அதற்கான சான்று
   vi) தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் பணியிலிருக்கும், பணியிலிருந்து ஓய்வு பெற்ற, இறந்த மற்றும் மருத்துவரீதியான தகுதியின்மை பெற்றவர்கள் மற்றும் பணிபுரியும் அமைச்சுப் பணியாளர்களின் வாரிசுகள் எனில் அதற்குரிய சான்று. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளரின் வாரிசு என்பதற்கான உரிய சான்றிதழை கோட்ட தீயணைப்பு அதிகாரி தரத்தில் உள்ள அதிகாரியிடமிருந்து பெற்று விண்ணப்பப்படிவத்தோடு இணைக்காவிட்டால் அந்த விண்ணப்பதாரரின் விண்ணப்பம் வாரிசுக்கான ஒதுக்கீட்டின் கீழ ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
7) நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பத்தினை "**தலைவர், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம், P.T. Lee. செங்கல்வராய நாயக்கர் டிரஸ்ட், 2-வது மாடி, எண் 807, அண்ணா சாலை, சென்னை-600 002**" என முகவரியிட்டு அனுப்பவும்.
8) ஒருவர் ஒரு விண்ணப்பத்தினை மட்டுமே அனுப்ப வேண்டும். ஒன்றிற்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
9) அண்மையில் எடுக்கப்பட்ட புகைப்படம் ஒன்றை விண்ணப்பத்தில் ஒட்டவும், இது தவிர இரண்டு புகைப்பட நகல்களை ஒரே நெகட்டிவிலிருந்து எடுத்துத் தனியாக உடல் கூறு தேர்வின் போது சமர்ப்பிக்க வேண்டும்.
10) விண்ணப்பக் கட்டணம் எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பியளிக்கப்படமாட்டாது.
11) சரியாகப் பூர்த்தி செய்யப்படாத/கையொப்பமிடாத/புகைப்படம் ஒட்டப்படாத/தகுதியற்ற/தகுதி குறித்த சான்றிதழ் இணைக்கப்படாத/சரியான முகவரியிடப்படாத வங்கிவரைவோலையற்ற/வங்கி வரவோலையில் வங்கி அதிகாரியின் கையொப்பம் இல்லாத அல்லது குறைந்த மதிப்புடைய வங்கி வரைவோலையுடன் கூடிய விண்ணப்பங்கள், முதல்கட்ட பரிசீலனையிலேயே முன்னறிவிப்பு இன்றி நிராகரிக்கப்படும்.
12) பல்வேறு தேர்வுகளின் போது போட்டியாளர்களுக்கு ஏற்படும் விபத்து, உயிரிழப்பு, உடல்நல பாதிப்பு மற்றும் காயங்களுக்கு இத்துறையோ, தேர்வுக் குழுமமோ, அரசோ பொறுப்பேற்காது.

**VIII)** <u>அழைப்புக் கடிதம்:</u>

**எழுத்துத் தேர்வு 05-10-2008 ஞாயிறு காலை 10.00 மணிக்கு** நடைபெறும். இத்தேர்வுக்கான அழைப்புக் கடிதங்கள் தேர்வு மைய விவரங்களுடன் தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு அவர்களது விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்படும்.

**IX)** <u>தேர்வு முறைகள்:-</u>

i) <u>எழுத்துத் தேர்வு:</u> எழுத்துத் தேர்வு கீழ்கண்டவாறு இருக்கும்:-

1. பொது அறிவு குறியிலக்க முறையில் (தமிழில்) : <u>50 மதிப்பெண்கள்</u>
2. உளவியல் (மனோ தத்துவ) தேர்வு குறியிலக்க முறையில் (தமிழில்) : <u>30 மதிப்பெண்கள்</u>

மொத்தம் : <u>80 மதிப்பெண்கள்</u>

(1) பொது அறிவுத்தேர்வு பள்ளி இறுதி வகுப்பு (எஸ்.எஸ்.எல்.சி) தரத்திற்கு இருக்கும், (2) உளவியல் தேர்வு தகுதியுடைய விண்ணப்பதாரரின் இயற்கையான ஆற்றலையும் மனோபாவத்தையும் சோதிப்பதாய் இருக்கும், (3) ஒரே கேள்வித்தாளில் பகுதி "அ" பொது அறிவு வினாக்களையும், பகுதி "ஆ" உளவியல் வினாக்களையும் கொண்டதாக எழுத்துத் தேர்வு இருக்கும் (4) எழுத்துத் தேர்வில் குறைந்தபட்சம் 40 மதிப்பெண்கள் பெறவேண்டும்.

ii) <u>அசல் சான்றிதழ்களைச் சரிபார்த்தல்:-</u> எழுத்துத் தேர்வில் தேர்வு பெற்றவர்களுக்கு மட்டுமே அசல் சான்றிதழ்கள் சரிபார்க்கப்படும். விண்ணப்பத்துடன் அனுப்பிய சான்றிதழ்களின் <u>அசல்கள்</u> அனைத்தையும் தேர்வு மையத்திற்குச் குறிப்பிட்ட தேதியில் சரிபார்ப்பதற்காக அவசியம் கொண்டுவர வேண்டும்.

iii) <u>உடல் கூறு அளத்தல் (Physical Measurement Test):</u> எழுத்துத் தேர்வில் தேர்ச்சி பெற்று, கல்வி, வயது ஆகியவற்றில் தகுதியுடையவர்கள் மட்டும் இத்தேர்வுக்கு அனுமதிக்கப்படுவர், உடல்கூறு அளத்தலில் தேர்வு பெற்றவர்கள் உடல் தாங்கும் திறனறித் (Endurance) தேர்வுக்கு அனுமதிக்கப்படுவர்.

iv) <u>உடல் தாங்கும் திறனறித் தேர்வு (Endurance Test):</u>
விண்ணப்பதாரர்கள் 1500 மீட்டர் ஓட்டத்தினை 7 (ஏழு) நிமிடங்களில் முடிக்க வேண்டும், இதில் தேர்வு பெற்றவர்கள் மட்டுமே உடல் திறன் தேர்வுக்கு அனுமதிக்கப்படுவர்.

v) <u>உடல் திறன் தேர்வுகள் (Physical Efficiency Test) :</u> **உடல் தாங்கும் திறனறித் தேர்வில் தகுதியுடைவர்கள் மட்டும் கீழ்க்காணும் உடல் திறன் தேர்வுக்கு அனுமதிக்கப்படுவர்:-**

| வ. எண். | தேர்வுகள் | 1 நட்சத்திரம் 2 மதிப்பெண்கள் | 2 நட்சத்திரம் 5 மதிப்பெண்கள் |
|---|---|---|---|
| 1. | கயிறு ஏறுதல் | 5 மீட்டர்கள் | 6 மீட்டர்கள் |
| 2. | நீளம் தாண்டுதல் (அல்லது)<br>உயரம் தாண்டுதல் | 3.80 மீட்டர்கள்<br>1.20 மீட்டர்கள் | 4.50 மீட்டர்கள்<br>1.40 மீட்டர்கள் |
| 3. | 100 மீட்டர் ஓட்டம் (அல்லது)<br>400 மீட்டர் ஓட்டம் | 15.0 வினாடிகள்<br>80.0 வினாடிகள் | 13.5 வினாடிகள்<br>70.0 வினாடிகள் |

**மேற்கண்ட 3 தேர்வுகளில் கயிறு ஏறுதல் ஆண் தேர்வாளர்கள் அனைவருக்கும் கட்டாயமாகும்.** மீதமுள்ள 2 தேர்வுகளில் ஏதேனும் ஒரு தாண்டுதல் மற்றும் ஏதேனும் ஒரு ஓட்டப்பந்தயத் தேர்வினை விருப்பப்படி தேர்ந்தெடுக்க வேண்டும். மேற்படி 3 தேர்வுகளில். தலா ஒவ்வொரு தேர்விலும் குறைந்தது ஒரு நட்சத்திரத் திறனுடன், மொத்தம் குறைந்தது 6 மதிப்பெண்கள் பெற வேண்டும். 6 மதிப்பெண்கள் பெறாதவர்கள் தகுதியற்றவர்களாகக் கருதப்படுவர். **நீளம் / உயரம் தாண்டுதல் தேர்வுகளுக்கு மட்டும் 2 வாய்ப்புகள் அளிக்கப்படும். கயிறு ஏறுதல் மற்றும் ஓட்டப்பந்தயம் ஆகியவற்றிற்கு ஒரு வாய்ப்பு மட்டுமே அளிக்கப்படும். கயிறு ஏறும் பொழுது கைகளைத் தவிர, கால்களோ, உடலின் வேறெந்த பாகங்களோ கயிற்றின் மீது பட்டால் தகுதி நீக்கம் செய்யப்படுவார்கள்.**

**X)** <u>மருத்துவத் தேர்வு:</u> எழுத்துத் தேர்வு மற்றும் உடல் திறன் தேர்வில் பெறும் மொத்த மதிப்பெண்களின் அடிப்படையில், இந்த விளம்பரத்தில் குறிப்பிட்டுள்ள காலியிடங்களுக்கு வகுப்புவாரி விகிதாச்சாரத்தின்படி தகுதியானவர்கள் மட்டுமே மருத்துவத் தேர்வுக்கு அழைக்கப்படுவர். **லேசர் சிகிச்சை மூலம் கண் பார்வை தகுதி பெற்றிருந்தால் அது செல்லத்தக்கதல்ல.**

**XI)** <u>மதிப்பெண்களின் ஒதுக்கீடு:</u>

1. எழுத்துத் தேர்வு [பொது அறிவு மற்றும் உளவியல் (மனோதத்துவம்) குறியிலக்க முறையில் (தமிழில்) ] : **80 மதிப்பெண்கள்**
2. உடல்திறன் தேர்வுகள் **(Physical Efficiency Test)** : **15 மதிப்பெண்கள்**
3. பிற சான்றிதழ்கள் (என்.சி.சி., என்.எஸ்.எஸ். & விளையாட்டு) : <u>**5 மதிப்பெண்கள்**</u>

**(இக்குழுமம் வகுத்துள்ள வரைமுறைகளின்படி இந்த மதிப்பெண்கள் வழங்கப்படும். வரைமுறைகளின் விவரங்கள் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள தகவல் கையேட்டில் உள்ளன)** மொத்தம் <u>**: 100 மதிப்பெண்கள்**</u>

**XII)** ஏற்கெனவே அரசுப் பணியில் இருப்பவர்கள் தங்கள் விண்ணப்பங்களை அவரவர்கள் பணிபுரியும் துறை மூலம் தடையில்லாச் சான்று பெற்று அனுப்ப வேண்டும்.

**XIII) 18-08-2008** தேதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**XIV)** தேர்வு முடிவுகள் **www.tn.gov.in/tnusrb** என்ற இணையதளத்தில் வெளியிடப்படும். இணையதளத்தில் முடிவுகள் வெளியிடப்படும் செய்தி நாளிதழ்களில் வெளியிடப்படும். தேர்ச்சி பெறாதவர்களுக்கு தனித்தனியாக முடிவுகள் அனுப்பப்படமாட்டாது. இத்தேர்வு குறித்து பரிந்துரை செய்தாலோ அல்லது தகாத செயல்களில் ஈடுபட்டாலோ அவரின் விண்ணப்பம் எவ்வித முன்னறிவிப்பின்றி நிராகரிக்கப்படும். இந்த அறிவிக்கையின் நகலும், மாதிரி விண்ணப்பப்படிவமும், www.tn.gov.in/tnusrb என்ற இணையதளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது.

தலைவர்
தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம், சென்னை-600 002